தமிழின் சிறப்பு

வளர்நிலை - 08

உலகில் மூவாயிரம் மொழிகளுக்கு மேல் உள்ளன. அம் மொழிகளில் இயல்பாகத் தோன்றிய இயன்மொழியாகத் தமிழ் மொழி விளங்குகின்றது. தமிழ் என்னும் சொல்லின் பொருள் இனிமை, எளிமை, நீர்மை என்பதாகும். இதனையே மகாகவி பாரதியாரும்

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்

இனிதாவது எங்கும் காணோம்' எனத் தமிழ் மொழியைச் சிறப்பிக்கின்றார்.

நம் முன்னோர் தாம் பேசிய மொழிக்குத் "தமிழ்" எனப் பெயரிட்டனர். தமிழில் நாற்கணங்கள் உண்டு. அவை முறையே உயிர், வல்லினம் மெல்லினம், இடையினம் ஆகும். 'த்" வல்லினத்தைச் சார்ந்தது "ம்" மெல்லினத்தைச் சார்ந்தது. "ழ்" இடையினத்தைச் சார்ந்தது. அ, இ என்பன உயிர் ஆகும். இவ்வாறு தமிழ்மொழியின் பெயரே சிறப்பாக இனிமையாக அமைந்துள்ளமை வியப்புக்குரியது.

காலம் மாறினாலும் கண்டம் பல அழிந்தாலும் அழியாத சிறப்புடைய மொழியாகத் தமிழ் மொழி திகழ்கின்றது. தமிழுக்கு முத்தமிழ் எனவும் பெயருண்டு. இது இயல், இசை, நாடகம் என்பதாகும். இயற்றமிழ் எண்ணத்தை வளர்க்கும் இசைத்தமிழ் உள்ளத்தை உருக்கி மனதை நெகிழச்செய்யும். நாடகத்தமிழ் பேச்சாலும் நடிப்பாலும் கருத்துக்களைக் கூறுவதாகும்.

அக்கால மக்கள் வீர வாழ்க்கையையும் கொடைச் சிறப்பையும் கொண்டிருந்தனர் என்பதற்கு பத்துப்பாட்டும் எட்டுத்தொயையும் சான்றாக உள்ளன. பிற மொழியாளர்கள் வியக்கும் அளவிற்கு அமைந்துள்ள திருக்குறளும் தமிழ் மொழிக்கு வளம் சேர்த்துள்ளது.

மனதை உருக்கி நெகிழ்விக்கும் தேவார, திருவாசகம் தமிழை மேலும் சிறப்பித்து நிற்கின்றன. வேற்று மொழிகளில் இல்லாத அளவிற்குத்

தொல்காப்பியம் தொடங்கி பன்னூறு இலக்கிய இலக்கண நூல்கள் தமிழுக்கு வளம் சேர்த்திருக்கின்றன.

தமிழ் எழுத்துகளின் ஒலிகள் மிக எளிமையாக அமைந்திருப்பதால் எவ்வித இடர்பாடுமின்றி ஒலிகளை ஒலிக்க இயலும். தமிழ்மொழியில் திண்மத்தன்மை உடையதாக வல்லினமும், உலோகத்தன்மை உடையதாக மெல்லினமும், திரவத்தன்மை உடையதாக இடையினமும் உள்ளன. ஆனால் காற்றுத்தன்மை உள்ள எழுத்துகள் தமிழில் இல்லை இது தமிழ்மொழி அறிவியல் வகைப்பட்டது என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

எனவே நாம் எமது மொழியிலுள்ள அறிவியலையும், உயர்பண்பாட்டையும் அறநெறிகளையும், தத்துவங்களையும், கலைகளையும், பல்துறை சார்ந்த அறிவினையும் முழுமையாகப் பெற்றுக் கொள்ள எமது பாரம்பரிய மொழியைக் கற்போம்.

நன்றி, வணக்கம்!